TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.நி.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8101992

1. District மாவட்டம்: Madurai PS காவல்நிலையம்: V & AC Year ஆண்டு: 2025 FIR No. மு.த.அ. எண்: 03/2025 Date நாள்: 24.02.2025

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended Sections பிரிவுகள்: U/S 7(a) of PC Act 1988
(ii) Act சட்டம்: by PC (amendment) Sections பிரிவுகள்: as amended by the PC
(iii) Act சட்டம்: Act 2018 Sections பிரிவுகள்: (Amendment) Act 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : Date to நாள் வரை: (1) 24.01.2025 at afternoon
Time Period நேர அளவு Time from நேரம் முதல் : Time to நேரம் வரை: (2) 21.02.2025 at 17.00 hrs
(b) Information Received at PS Date: காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.02.2025 Time நேரம்: 07.25 hrs
(c) General Diary Reference: Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 24.02.2025 Time நேரம்: 08.30 hrs.

4. Type of Information: Written/ Oral தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக: Typed Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: 25 KM, South West
Beat Number முறைக் காவல் எண் (b) Address முகவரி: Sub-Registrar Office, Thirumangalam, Madurai District.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S.: — District: —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: D. Senthil Kumar (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர்: V. Deivendran
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு: 03-01-1981 (d) Nationality நாட்டினம்: Indian (e) Passport No. வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்: —
Date of Issue வழங்கப்பட்ட நாள்: — Place of Issue வழங்கப்பட்ட இடம்: —
(f) Occupation தொழில்: Software Engineer (g) Address முகவரி: 134, Ashok Nagar, Jawahar Nagar 11th Street, Thirumangalam. Madurai

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Pandiyarajan, Sub-Registrar (Incharge), Thirumangalam SR Office Madurai.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate Sheets attached herewith in Page No's 3 to 6

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS .............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................. பதவி .................. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டவருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

24/02/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டவர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
24.02.2025 at 09.40 hrs

Name: பெயர் T. Suriyakala
Rank: நிலை Inspector of Police No. எண்
VQ AC, Madurai
(24.02.2025)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,

இன்று 24.02.2025-ஆம் தேதி காலை 07.25 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்டம் திருமங்கலம், அசோக் நகர், ஜவஹர் நகர் 11 வது தெரு, கதவு எண். 134 என்ற முகவரியில் வசிக்கும் தெய்வேந்திரன் மகன் திரு. D. செந்தில்குமார் என்பவர் நிலையத்தில் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனு ஒன்றை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புநர், D. செந்தில்குமார், த/பெ. V. தெய்வேந்திரன், எண். 134, அசோக் நகர், ஜவஹர் நகர் 11 வது தெரு, திருமங்கலம், மதுரை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ஐயா, நான் மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் எனது தாயார் மற்றும் எனது கடைசி தம்பி செல்வேந்திரகுமாருடன் வசித்து வருகின்றேன். எனது மற்ற தம்பிகள் விஜயகுமார், விஜேந்திர குமார் ஆகிய இருவரும் சென்னையில் பணிபுரிந்து வருகிறார்கள். நான் கலசலிங்கம் பொறியியல் கல்லூரியில் B.E. (Computer Science) முடித்து விட்டு, கடந்த 2 ½ வருடங்களுக்கு மேலாக Oracle Solution Services (India) Private Ltd., என்ற நிறுவனத்தில் பணிபுரிந்து வருகின்றேன். எனது தாயாரின் சொந்த ஊரான ஆலம்பட்டி கிராமத்திற்கு அருகிலுள்ள கிழவனேரி கிராமத்தில் ஏற்கனவே எனது பெயரிலுள்ள தோட்டத்திற்கு பக்கத்தில் Madhuram Properties and Promoters (India) Ltd., என்ற நிறுவனத்திற்கு சொந்தமான கிழவனேரி கிராம சர்வே எண். 9/2-ல் கட்டுப்பட்ட 3 ஏக்கர் 18 செண்ட் புன்செய் நிலம் அந்த நிறுவனத்தின் முகவர் திரு.ஆனந்தராஜ் பெயரில் இருப்பதாக தெரிந்து கொண்டேன். அந்த இடத்தை விற்க போவதாகவும், அந்த நிறுவனத்திடமிருந்து வேறு நிலங்களை ஏற்கனவே இரண்டு பேர் வாங்கியுள்ளதாகவும், எங்களது ஊர்காரர்கள் மூலம் தகவல் தெரியவந்தது. எனவே நான் Madhuram Properties and Promoters (India) Ltd., என்ற நிறுவனத்தாரிடம் அந்த நிலத்தை விலைக்கு பேசி முடித்தேன். அவர்களிடம் நான் வெளிநாட்டிற்கு சென்று வந்த பின்பு கிரையம் முடிப்பதாக தெரிவித்தேன். அவர்களும் சம்மதித்தார்கள். பின்னர் நான் கடந்த அக்டோபர் மாதம் ஆப்பிரிக்காவில் உள்ள ஜாம்பியா நாட்டிற்கு வேலை நிமித்தமாக சென்று விட்டேன். பின்னர் டிசம்பர் மாதம் ஊருக்கு திரும்பியவுடன் அந்த 3 ஏக்கர் 18 செண்ட் நிலத்தை கிரையம் செய்ய முடிவெடுத்தேன். பின்னர் கடந்த 24.01.2025 ம் தேதி ஆவண எழுத்தர் திரு.பாலமணிகண்டன் அவர்கள் மூலம் வரைவு கிரைய பத்திரம் தயார்

செய்து அன்று மதியம் திருமங்கலம் சார்-பதிவாளர் (பொறுப்பு) திரு.பாண்டியராஜன் அவர்களை அவரது அலுவலகத்தில் வைத்து சந்தித்து வரைவு கிரைய பத்திரத்தை கொடுத்தேன். திரு.பாண்டியராஜன் அவர்கள் வரைவு கிரைய பத்திரத்தை படித்து பார்த்துவிட்டு அவர் வைத்திருந்த பேப்பரில் ரூ.1,00,000/- என எழுதி என்னிடம் காண்பித்தார். நான் அதை பார்த்தவிட்டு அவரிடம், என்னால் அவ்வளவு பணம் லஞ்சமாக கொடுக்க முடியாது, என்னால் முடிந்த அளவு பணத்தை ஏற்பாடு செய்துவிட்டு வருகிறேன், பார்த்து செய்யுங்கள் என கூறிவிட்டு வந்துவிட்டேன். ஆவண எழுத்தர் திரு.பாலமணிகண்டன் அவர்களுக்கு பத்திரம் தயார் செய்ததற்கான கூலியை செலுத்திவிட்டேன். பின்னர் அன்று மதியம் நான் அந்த இடத்தை பதிவு செய்ய ஆவண எழுத்தர் பாலமணிகண்டன் மூலமாக ரூ.1,44,310/- கட்டணம் ஆன் லைனில் செலுத்தி இரசீது எண். 698/2025, ஆவண எண். 13/2025-க்கான இரசீதை பெற்று எனது பெயரில் கிரைய பத்திரம் பதிவு செய்தேன். பின்னர் சார்-பதிவாளர் அவர்கள் எனது கிரைய பத்திரத்தை விடுவிக்கவில்லை. எனது கிரையபத்திரம் சம்பந்தமாக ஆவண எழுத்தர் திரு.பாலமணிகண்டனிடம் கேட்டபோது, எனக்கு கிரையம் கொடுக்கும் திரு.ஆனந்தராஜ் பெயரில் உள்ள கிரையபத்திரம் காணவில்லை என தேனி மாவட்டம் தென்கரை காவல் நிலையத்தில் சான்று பெற்றுள்ளது சம்மந்தமாக விசாரணை செய்துவிட்டு, கிரைய ஆவணத்தை விடுவிப்பதாக சார்-பதிவாளர் திரு.பாண்டியராஜன் கூறியதாக என்னிடம் தெரிவித்தார். எனக்கு அலுவலக வேலை அதிகமாக இருந்ததாலும், எனது தாயாருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தாலும், நான் சார்-பதிவாளரை சந்திக்க முடியவில்லை. பின்னர் எனக்கு கிரையம் செய்து கொடுத்த திரு.ஆனந்தராஜ் பெயரில் உள்ள Missing Document சம்பந்தமாக தேனி மாவட்டம் தென்கரை காவல் நிலைய ஆய்வாளருக்கு கடிதம் அனுப்பி ஆய்வாளரிடமிருந்து சார்-பதிவாளர் (பொ) திரு. பாண்டியராஜன் அறிக்கை பெற்று, தனது விசாரணையை முடித்துவிட்டதாக ஆவண எழுத்தர் பாலமணிகண்டன் மூலம் தெரிந்து கொண்டேன். பின்னர் 21.02.2025-ஆம் தேதியன்று மாலை சுமார் 5 மணியளவில் ஆவண எழுத்தர் திரு.பாலமணிகண்டன் அவர்களுடன் திருமங்கலம் சார்-பதிவாளர் அலுவலகத்தில் திரு.பாண்டியராஜன் அவர்களை சந்தித்து எனது கிரைய ஆவண எண். 13/2025. நாள்: 24.01.2025 -த்தை விடுவிக்க சொல்லி கேட்டேன். உடனே அவர் என்னை அவரது அறையிலிருந்து வெளியே அழைத்துச் சென்று என்னிடம், நான் உங்களது கிரைய

பத்திரத்தின் மீதான விசாரணையை முடித்து விட்டேன். அதில் எந்த பிரச்சனையும் இல்லை. எனவே நான் உங்களிடம் ஏற்கனவே கேட்ட பணம் ரூ.1,00,000/-த்தை கொடுங்கள் என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம் பணம் ரொம்ப அதிகமாக இருக்கிறது, என்னால் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது, ஏற்கனவே எனக்கு நிறைய கமிட்மெண்ட் இருக்கிறது எனக் கூறினேன். அதற்கு அவர் உங்களுக்காக ரூ.10,000/-த்தை குறைத்து கொள்கிறேன், ரூ.90,000/- மட்டும் கொடுங்கள், உங்களது பத்திரத்தை நான் உடனே விடுவிக்கிறேன் என என்னிடம் கூறினார். அதற்கு நான் திரு.பாண்டியராஜன் அவர்களிடம், நீங்கள் உங்களது விசாரணையில் எந்த பிரச்னையும் இல்லை என தெரிந்த பின்பும் எதற்காக என்னிடம் பணம் கேட்குறீர்கள் எனக் கேட்டேன். அதற்கு அவர், நான் பத்திரம் பதிவு செய்வதற்கு வழக்கமாக வாங்கும் பணத்தை தான் உங்களிடம் கேட்கிறேன். உங்களுக்காக வேண்டுமென்றால் மொத்தம் ரூ.1,00,000/-த்திலிருந்து ரூ.30,000/- குறைத்து கொள்கிறேன். நீங்கள் நான் கேட்ட பணம் ரூ.70,000/-த்தை வரும் திங்கள் கிழமை (24.02.2025) மதியம் என்னிடம் கொடுத்தால்தான் உங்களது கிரைய ஆவணத்தை விடுவிப்பேன். பணம் கொடுக்கவில்லையென்றால் நீங்கள் அலைந்து கொண்டுதான் இருக்க வேண்டும் என்று கண்டிப்பாக கூறிவிட்டார். எனக்கு லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பம் இல்லை. எனவே, நான் எனது பெயரில் பதிவு செய்து நிலுவையில் உள்ள பத்திரத்தை விடுவிக்க என்னிடம் ரூ.70,000/- லஞ்சம் கேட்கும் திருமங்கலம் சார்-பதிவாளர் (பொ) திரு.பாண்டியராஜன் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் திரு.ஆனந்தராஜ் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தின் நகல் மற்றும் நான் 24.01.2025-ஆம் தேதியன்று திருமங்கலம் சார்-பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்வதற்காக ரூ.1,44,310/- கட்டணம் செலுத்திய இரசீது எண்.698/2025-ன் நகலை இணைத்துள்ளேன். மேலும், திருமங்கலம் சார்-பதிவாளர் (பொ) திரு.பாண்டியராஜன் அவர்கள் கேட்ட லஞ்சப் பணம் ரூ.70,000/-ஐயும் கொண்டு வந்துள்ளேன். அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (ஒ-ம்) XXXXXX (D. செந்தில்குமார்) 24/02/2025.

Sir, Received the typed complaint today on (24.02.2025) at 07.25 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified

through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Directorate of Vigilance and Anti-Corruption, Chennai and registered a case in Madurai V&AC Cr. No. 03/2025, u/s. 7 (a) of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 08.30 hrs and took up investigation. Sd./-XXXXXX (T.Suriyakala) 24.02.2025, Inspector of Police, V&AC, Madurai.

Original FIR along with original typed complaint of Tr.D. Senthilkumar, S/o. Deivendran, No. 134, Ashok Nagar, Jawahar Nagar 11th Street, Thirumangalam, Madurai District along with Xerox copies of Document No. 584/2016 in the name of A. Anantharaj and Thirumangalam Sub-Registrar office receipt No. 698/2025, dated: 24.01.2025 in the name of D. Senthilkumar are herewith enclosed and submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

(T. Suriyakala)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Madurai.
24.02.2025